மன்றத்தில் ஸ்டேஇன்ஸ்ட்ரைக்கைப் பற்றிக்கொடுக்கப்பட்ட தீர்ப்பைப்பற்றிய வகையில்தான் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டில் அது பற்றித் தீர்ப்பு இருக்கிறது. புதிதாக உயர்நீதிமன்றத் திலே இப்போது ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஸ்டே இன் ஸ்டிரைக் செய்வது முறைதான், சட்டப்படி நியாயந்தான் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் வேலை நேரத்திற்கு அப்பாற்பட்டு ஸ்டே இன் ஸ்டிரைக் செய்வது இல்லீகல் என்று சொல்லியிருக்கிறார்கள். இது புதிய கொள்கையாக இருக்கிற காரணத்தால் இது பற்றி அரசாங்கத்தின் சார்பில் பிரச்னையை எடுத்துக் காட்டி, அரசாங்கத்தைப் பொறுத்த வரை அந்தத் தீர்ப்பை மதித்து அமல் நடத்த வேண்டும், அதற்கு எல்லாத் தொழிலாளர் தலைவர் களும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. சில தொழிற்சாங்கத் தலைவர்கள் அந்தத் தீர்ப்பைத் தவறு என்றும், அதை எதிர்த்து அரசாங்கம் வாதிட வேண்டுமென்றும் சொன்னார்கள். சில தொழிற் சங்கத் தலைவர்கள், இது சரியான தீர்ப்புத்தான், ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதுதான் என்று சொன்னார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை, 'நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், அப்பீல் செய்ய வேண்டுமென்றால் செய்யுங்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை சட்டம், ஒழுங்குப் பிரச்னையாக வருகிற காரணத்தால் இந்தத் தீர்ப்பை அமல் நடத்த எல்லாத் தரப்பினரும் ஒத்துழைப்புத்தர வேண்டும்' என்று வேண்டுகோள் விடப்பட்டது. அந்த வேண்டுகோள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Drinking Water Scheme for Lakkampatti Panchayat

*** 178 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Public Health be pleased to state—**

(*a*) whether the work connected with the Protected Water Supply Scheme for Lakkampatti Panchayat in Gobichettipalayam taluk, Coimbatore district has been taken up for execution ; and

(*b*) if so, when it will be completed ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) குடிநீர்த் திட்ட வேலைகள் 1968-ம் ஆண்டு மார்ச் மாத முடிவில் நிறைவேற்றப்படும்.

DR. H. V. HANDE : Sir, what is the amount allotted for this and what is the stage in which the matter rests now ? Is the progress of work satisfactory and will the Government be able to complete the work by 1968 as per the target ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The estimated cost is Rs. 1·55 lakhs to instal and Rs. 3,500 to maintain. As I have already replied in my answer to the main question, the work will be completed by March 1968 and before the hon. Member returns to his constituency, he will get good water.

Tirunelveli Municipal Council

*** 179 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state —**

(*a*) whether the necessary notification in accordance with the amended legislation has been published calling for objections, with a view to revive the defunct Tirunelveli Municipal Council ; and

(*b*) if so, when would the Council start functioning ?

1968 மார்ச் 8]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம். 5—8—1967 தேதியுள்ள தமிழ்நாடு அரசாங்க இதழின் சிறப்பு வெளியீட்டில் அது வெளியிடப்பட்டது.

(இ) திருநெல்வேலி நகராட்சி மன்றம் 15—9—1967 முதல் மீண்டும் அமைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும்.

திரு. கே. விநாயகம்: இந்த விஷயத்தில் வந்த அப்ஜக்ஷன்ஸ் என்ன ? அவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? அல்லது அவற்றைப் பரிசீலித்து சரியல்ல என்று தள்ளி விட்டார்களா ? அதன் விவரங்களைக் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒரே ஒரு மறுப்புரைதான் வந்தது. பாதிரியார் நவமணி என்பவரிடமிருந்து வந்தது.

புதுத் தேர்தல் நடத்தி நகராட்சி மன்றத்தை மீண்டும் அமைக்கலாம் என்று கருத்து தெரிவித்தார்கள், அரசியல் கட்சிகள் இடையில் மனக் கசப்பு ஏற்படும் என்று அவர்கள் மறுப்புரையில் கூறியிருந்தார்கள். அது நியாயம் அல்ல என்று அரசாங்கம் கருதி அக்கருத்தைத் தள்ளி விட்டு திருநெல்வேலி நகராட்சி மன்றத்தைக் கலைத்து வெளியிட்ட அறிவிப்பை ரத்து செய்வதாக அறிவித்தது. அதன்படி அது 15—9—1967 முதல் செயல்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தக் கேள்வியின் அடிப்படையே தவறு என்பது என் கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறாயிருக்கலாம் ஆனால் நான் அனுமதி கொடுத்து விடை சொல்லியாகிவிட்டது.

Thiru K. VINAYAKAM : Sir, on a point of order. I have put the main question and it is within the jurisdiction of the Hon. Speaker to say whether it is in order or not. When the Hon. Speaker has allowed the question to be answered, it is not right on the part of any hon. Member to question it. Will the Hon. Speaker give a ruling on the matter ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸி லிருந்து 350-வது பக்கத்தை நான் அடிக்கடி படித்துக்காட்டியிருக் கிறேன். பேரவைத் தலைவரின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட காரியங் களை இந்தப் பேரவையில் எழுப்பக் கூடாது. கேள்விகளை அனுமதிப்பது, முன் அறிவிக்கைகளை அனுமதிப்பது, அவையுரிமைக் கேள்விகளை அனுமதிப் பது, ஒத்திவைப்புத் தீர்மானங்களை அறையில் தள்ளிவிடுவதுபோன்ற காரியங்கள் பேரவைத் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. அவை பற்றி இங்கு கேள்விகள் எழுப்பக் கூடாது.

In May's Parliamentary Practice page 350 it is stated—

'Questions dealing with matters within the jurisdiction of the Speaker should be addressed to the Speaker by Private Notice.'

இந்தக் காரியங்களைப்பற்றி கடிதங்கள் எழுதலாம், தனியாக வந்து என்னைக் கேட்கலாம், ஆனால் கேள்வியை அனுமதித்தது சரியா

அல்லது தவறு என்று இங்கு பேரவையில் கேட்கக் கூடாது. தனியாக என் அறைக்கு வந்து கேட்கலாம் அல்லது கடிதம் எழுதலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : "செயலற்றுப்போன திருநெல்வேலி நகராட்சி மன்றம்" என்பதை 'செயல்படாமல் செய்யப்பட்ட திருநெல்வேலி நகராட்சி மன்றம்" என்று மாற்றவேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள். இப்போது இருப்பதைப் பார்த்தால் தானாகவே செயல்படாமல் ஸ்தம்பித்து விட்டது என்றாகிவிடும் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காக என்ன கேள்வி போடுகிறீர்கள் ?

திரு. வி. கே. கோதண்டராமன் : அதைத் திருத்த வேண்டும், அதை மாற்றவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்கப்பட்ட வினாவை மாற்ற முடியாது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : மக்களிடமிருந்து வந்த அப்ஜெக்ஷன்ஸ் பற்றி திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். சென்ற முறை திருநெல்வேலி தொகுதியில் நடந்த தேர்தலில் தி. மு. க. விற்கு 41,000 சில்லறை வோட்டுகளும், காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுக்கு 16,000 வோட்டுகளும் கிடைத்தன. மக்கள் அந்த நகரசபையைக் கலைப்பதை விரும்பவில்லை என்பதையும், நகரசபை மீண்டும் இயங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கிறார்கள் என்பதையும் அரசு உணருமா ? அதை அங்கத்தினர் அவர்களுக்கு கனம் அமைச்சரவர்கள் உணர்த்துவார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அங்கத்தினர் அவர்களே, திருநெல்வேலி நகராட்சி மன்றம் மீண்டும் நிலைத்திருக்கவேண்டும் என்று உறுதி அளிப்பதற்காக இக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஒரு பாதிரியாரிடமிருந்து மட்டும் குறிப்பு வந்தது என்று சொன்னார்கள். அந்தப் பாதிரியார் உள்நாட்டுப் பாதிரியாரா அல்லது வெளிநாட்டுப் பாதிரியாரா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : உள்நாட்டுப் பாதிரியாரா அல்லது வெளிநாட்டுப் பாதிரியாரா என்ற ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. அவர் உள்நாட்டுப் பாதிரியார் என்றுதான் நான் கருதுகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : நெல்லை நகராட்சி மன்றம் தானாகவே செயலற்றுப் போனதா அல்லது செயலற்றதாக போக ஆக்கப்பட்டதா ? அப்படி ஆக்கப்பட்டதென்றால் அது யாரால் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தானாகவே செயலற்றுப் போகவில்லை. செயலற்றதாக ஆக்கப்பட்டது. கடந்த காலத்தில் இருந்த அரசாங்கம் அப்படி அந்த நகராட்சி மன்றத்தை ஆக்கிவிட்டது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : நெல்லை நகராட்சி மன்றம் செயல்படாமல் ஆக்கப்பட்டு வழக்குமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதன் பேரில் நீதிமன்றம் தந்த தீர்ப்பு என்ன ? அதைப் பற்றி விளக்கம் தருவார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய முழு விவரங்கள் இல்லை. அதுபற்றி அளிக்கப்பட்ட தீர்ப்பின் விவரங்கள் அத்தனையும் பத்திரிகைகளில் வந்திருந்தன. கீழ்மன்றத்தில் நகராட்சி மன்றத்திற்கு சாதகமாகவும் மேல் முறையீட்டில் நகராட்சி மன்றத்திற்குப் பாதகமாகவும் அமைந்தது. அதற்கு மேல் முறையீடு செய்வதாக இருந்த நிலையில் புது அரசு இந்த முடிவு எடுத்ததை எல்லோரும் அறிவர்.